www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 10

தேர்வு எண் 1 0 7 9

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

## தமிழ்

நேரம் : 3.00 மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I (மதிப்பெண்கள்:15)

குறிப்புகள்: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினைச் சேர்த்து எழுதவும்.

15X1=15

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.

1. 'சாகும்போது தமிழ் படித்துச் சாகவேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' – என்று கூறியவர்
அ) திரு.வி.க ஆ) க. சச்சிதானந்தன் இ) நம்பூதனார் ஈ) தனிநாயக அடிகள்

2. தேர்ப்பாகன் – இத்தொடரில் அமைந்துள்ள தொகையைத் தெரிவு செய்க.
அ) வினைத்தொகை ஆ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை
இ) பண்புத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத் தொகை

3. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிக கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும் இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

4. "கத்துங் குயிலோசை – சற்றே வந்து காதிற் படவேணும்" பாரதியார். –இப்பாடலடியில் இடம் பெற்றுள்ள வழுவமைதி
அ) திணை வழுவமைதி ஆ) பால் வழுவமைதி
இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி

5. "நாற்றிசையும் செல்லாத நாடில்லை"– "ஐந்துசால்பு ஊன்றிய தூண்" – இந்தச் செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களையும், அவற்றிற்கான தமிழ் எண்களையும் தேர்க.
அ) நான்கு, ஐந்து – ச, ரு ஆ) மூன்று, நான்கு – ங, ச
இ) ஐந்து, ஏழு – ரு, எ ஈ) நான்கு, ஆறு – ச, சா

6. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

7. கலையின் கணவனாகவும், சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – ஜெயகாந்தனின் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது ---------
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார் ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

8. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில் தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது– இத்தொடருக்கான வினா எது?
அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்? ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?
இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா? ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

9. பரிபாடல் அடியில், "விசும்பும் இசையும்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும், புகழையும்
இ) வானத்தையும், பூமியையும் ஈ) வானத்தையும், பேரொலியையும்



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. கல் – கூட்டப் பெயரைத் தேர்க.

அ) கட்டு ஆ) குலை இ) குவியல் ஈ) தாறு

11. சீவலமாறன் என்ற பட்டப்பெயர் கொண்டவர்

அ) பெருஞ்சித்திரனார் ஆ) தமிழழகனார் இ) தேவநேயப் பாவாணர் ஈ) அதிவீரராம பாண்டியர்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடையளி.

*"உய்முறை அறியேன்; ஓர்ந்த*
*உணர்வினொத்து உறுப்பும் இல்லா*
*மெய்முறை அறியேன்: மெய்தான்*
*விரும்பிய உணவு தேடச்*
*செய்முறை அறியேன்; கானில்*
*செல்வழி அறியேன்; தாய்தன்*
*மைமுறை அறிந்தேன் தாயும்*
*கடிந்தெனைத் தனித்துக் போனாள்"*

12. இப்பாடலின் ஆசிரியர்?

அ) தமிழழகனார் ஆ) பாரதியார்
இ) வீரமாமுனிவர் ஈ) பாரதிதாசன்

13. இப்பாடல் இடம் பெற்ற நூல்?

அ) கம்பராமாயணம் ஆ) தேம்பாவணி
இ) சிலப்பதிகாரம் ஈ) காசிக்கண்டம்

14. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களைத் தேர்க.

அ) உய்முறை – உணர்வு ஆ) மெய்முறை – செல்வழி
இ) மெய்முறை – செய்முறை ஈ) தாய் – கடிந்தெனை

15. செய்முறை என்பதன் இலக்கணக்குறிப்பு தருக ----------

அ) வினைத்தொகை ஆ) தொழில்பெயர் இ) வினைமுற்று ஈ) பெயரெச்சம்

## பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. வசனகவிதை – குறிப்பு வரைக.

17. நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் எவர் என வள்ளுவர் வாய்மொழி கூறும் செய்தி யாது?

18. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்கள் நான்கு எழுதுக.

19. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) தமிழ்த்தென்றல் திரு.வி.க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்.

ஆ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.

20. ஜெயகாந்தனின் திரைப்படமான படைப்புகளில் எவையேனும் இரண்டினை எழுதுக.

21. 'வினை' என முடியும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5X2=10

22. "இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போனை வையி, நாங் கௌம்பிட்டேன்.... உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக." –

23. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

24. அடிக்கோடிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.

<u>அன்புச்செல்வன்</u> திறன்பேசியின் <u>தொடுதிரையில்</u> படித்துக் கொண்டிருந்தார்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

25. சந்தக் கவிதையில் பிழைகளைத் திருத்துக.

"தேனினிலே ஊறிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஒதி யுணர்ந்தின் புருவோமே"

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

ஊர்ப்பெயர்களின் மரூஉ வை எழுதுக. அ) உதகமண்டலம் ஈ) நாகப்பட்டினம்

26. கலைச்சொல் தருக. அ) VOWEL ஆ) EMBLEM

27. "கிளர்ந்த" – பகுபத உறுப்பிலக்கணம் தருக

28. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக.

## பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2X3=6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

"போலச் செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று. மரத்தாலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்து கொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம். அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

1. எப்பண்புகளைப் பின்பற்றிப் பொய்க்கால் குதிரையாட்டம் நிகழ்த்தப்படுகிறது?
2. பொய்க்கால் குதிரையாட்டம் வேறுபெயர்கள் யாவை?
3. யாருடைய காலத்தில் இது தஞ்சைக்கு வந்தது?

30. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" வினவுவது ஏன்?

31. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

## பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.
வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 2X3=6

32. வானித் தண்ணீர்; சாயக்குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

33. கம்பராமாயணம் குறிப்பு வரைக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "விருந்தினனாக" – எனத் தொடங்கும் காசிக்கண்டம் பாடல். (அல்லது)

ஆ) "மாற்றம்" – எனத் தொடங்கும் காலக்கணித பாடல்.

## பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2X3=6

35. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

36. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. கொண்டுக் கூட்டு பொருள்கோள் – விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5X5=25

38. அ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

(அல்லது)



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஆ) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப் பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தைக் கவினுற எழுதுக.



41. எழில்மாறனின் மகன் தமிழணங்கு இளங்கலை தமிழ் பட்டம் முடித்துள்ளார். அவர் தட்டச்சு பிரிவில் தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் மேல்நிலை முடித்துள்ளார். கணினியில் எம்.எஸ்.ஆபிஸ் முடித்துள்ளார். அவர் தமிழ் வாரப்பத்திரிக்கையில் தட்டச்சர் பணி வேண்டி விண்ணப்பிக்கிறார். தேர்வர் தன்னை தமிழணங்காக நினைத்து உரிய படிவத்தை நிரப்புக.

42. அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

The golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their Wandering. The colourful birds start Twitting their morning melodies in Percussion.The cute butterflies dance around the Flowers. The flowers fragrances fills the breeze. The breeze gently blows everywhere and makes everything Pleasant.

## பகுதி – V (மதிப்பெண்கள் – 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24

43. அ) போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக்கலைஞர் – இயற்றமிழ்கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக. (அல்லது)

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) 'மங்கையராய்ப் பிறப்பதற்கே' என்னும் பாடத்தில் இடம் பெற்றுள்ள மூவர் பற்றிச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) 'புயலிலே ஒரு தோணி' கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரித்து எழுதுக.

45. அ) 'போதையில்லா புத்துலகைப் படைப்போம்' என்ற தலைப்பில் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக. முன்னுரை – பரவலான போதைப்பழக்கம்– காரணங்கள் – போதைப்பழக்கத்தின் விளைவுகள் – விடுபடும் வழிமுறைகள் – விழிப்புணர்வு – நமது கடமைகள் – முடிவுரை.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பிடுக.

முன்னுரை – சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு – சாலை விதிகள் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்தினைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com